27th September 1958]

SRI S. M. ANNAMALAI : சென்னையிலுள்ள இன்ஸ்பெக்டர் ஆப் லோகல் பண்ட்ஸ் ஆபீசுக்கு உள்ளே சென்றால், "பிளாக் ஹோல் ஆப் கல்கத்தா" மாதிரியிருக்கிறது. அதை மாற்றியமைக்க ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

MR. SPEAKER : தனிக்கேள்வி போடவேண்டும்.

Supply of electricity to Kongarayanallur

* 556 *Q.*—SRI M. C. MUTHUKUMARASWAMY : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1957-ம் ஆகஸ்ட்மீ 10உ கனம் பொது மராமத்து இலாகா அமைச்சர் அவர்கள் நன்னிலம் தாலூகாவில் சுற்றுப்பிரயாணம் செய்தபோது நன்னிலம் தாலூகா, நெ. 42, கொங்கராயநல்லூர் ஹரிஜன வாசிகளால் மேற்படி ஹரிஜன தெருவிற்கு மின்சாரம் விஸ்தரிக்க வேண்டுமென்று கொடுக்கப்பட்ட மனுவின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

(ஆ) அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) எப்போது மேற்படி வேலை முடிவு பெறும் ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) The petition referred to has not been received by the Government. The electrical licensee having jurisdiction over the area, has, however, stated that he has not so far received any requisition for extension of electricity for street lights in the Harijan colonies either from the panchayat or from the residents of the locality. However, he would examine the position, if specific requisitions with details of requirements are received.

(*b*) & (*c*) Do not arise.

SRI M. C. MUTHUKUMARASWAMY : அமைச்சர் அவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்யும்பொழுது, நானே அந்த மனுவை அமைச்சர் அவர்களிடம் கொடுத்தேன். வரவில்லை என்று சொல்லுகிறார்கள். இனியாவது அதன்மீது தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : இன்னொரு மனு கொடுத்தால் நல்லது.

SRI K. B. S. MANI : இப்பொழுது ஹரிஜன காலனிகளுக்கு இலவசமாக மின்சார வசதி கொடுப்பதற்காக டைரக்டரால் ஒவ்வொரு ஜில்லாவுக்கும் 10,000 ரூபாய் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பணத்தைக் கொண்டு ஜில்லா ஹரிஜன பொதுநல அதிகாரியின் சிபார்சின் பேரில், அவர் சிபார்சு செய்கிற கிராமங்களுக்கு மின்சார சப்ளை கொடுப்பதற்கு முன் வருவார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : ஹரிஜனச் சேரிகளுக்கு மின்சார சப்ளையைப் பொறுத்தவரையில், சமீப காலத்தில் ஹரிஜன இலாக்காவும், மின்சார இலாக்காவும் ஒன்றாகக் கூடி, எல்லாப் பஞ்சாயத்துப் பகுதிகளுக்கும் கொடுக்கிற நேரத்திலே, அந்தப் பகுதிகளிலே இருக்கக்கூடிய சேரிகளுக்கும் கொடுக்கவேண்டுமென்று முடிவு செய்திருக்கிறது. பல வருடங்களுக்கு முன்னதாகவே விஸ்தரிக்கப்பட்ட பகுதிகளில் ஹரிஜன இலாக்கா இரண்டு லட்சம் ரூபாய் வருஷத்திற்குக் கொடுத்து, அந்த விஸ்தரிப்புக்கு இந்தத் தொகையைக் கொண்டு உதவி செய்யவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. எவ்வெப்பொழுது எந்தெந்தப் பகுதியிலிருந்து கோரிக்கை வருகிறதோ, அதைப் பரிசீலனை செய்து, இந்தப் பணத்தைக் கொண்டு அந்தப் பகுதிகளுக்கு விஸ்தரிப்புச் செய்து கொடுத்து வருகிறோம்.